# ஒன்றிணைந்த ஊடக வெளியீடு

***சர்வதேச சிறுவர் பாதுகாப்பு மாநாடு - 2025***

***ஐரோப்பிய ஒன்றியமும் இலங்கையும் ஒன்றிணைந்து, சிறுவர்களுக்கெதிரான வன்முறையை ஒழிப்பதற்காக சிறுவர் பாதுகாப்பு குறித்து வரலாற்று சிறப்புமிக்க சர்வதேச மாநாட்டினை நடாத்துகின்றன.***

***கொழும்பு, இலங்கை, 2025 ஜுலை 25 ஆம் திகதி*** *– இலங்கையில் இடம்பெறுகின்ற சிறுவர்களுக்கெதிரான அனைத்து வகையான வன்முறைகளையும் எதிர்த்துப் போராடுவதற்கு தேவையான அழுத்தங்களை வழங்கும் நோக்கில் சர்வதேச சிறுவர் பாதுகாப்பு மாநாடு (ICCP'25) இன்று ஆரம்பமாகி ஜுலை 27 ஆம் திகதி வரை நடைபெறும். அனைத்து சிறுவர்களுக்கும் உறுதியான மற்றும் நிலைத்திருக்கும் பாதுகாப்பு முறைமைகளை திட்டமிட்டு உருவாக்குவதற்காக இந்த மாநாட்டில் முன்னணி அரச நிறுவனங்கள், சர்வதேச மற்றும் உள்நாட்டு துறைசார் நிபுணர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்பிற்கு பொறுப்பான அதிகாரிகள் உள்ளடங்கலாக கிட்டத்தட்ட 250 பேர் பங்கேற்கின்றனர்.*

*களனிய பல்கலைக்கழகத்தின் பால்நிலை கற்கைகள் மத்திய நிலையமானது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் (NCPA) கூட்டொத்துழைப்புடன் ஏற்பாடு செய்துள்ள இந்த மாநாட்டிற்கு ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தினூடாக (UNICEF Sri Lanka) அதன் ஒத்துழைப்புக்களை வழங்கிக்கொண்டிருக்கின்றது. இன்று கடும் அழுத்தங்களை ஏற்படுத்திக்கொண்டிருக்கும் சிறுவர்களுடன் தொடர்புடைய பிரச்சினைகளுக்கு துரித தீர்வுகளை காண வேண்டிய கட்டாயத்தில் நாடு இருப்பதால், குறித்த விடயம் தொடர்பாக கொள்கை உருவாக்கத்தை நோக்கி வழிப்படுத்துவதும் , கல்வி ரீதியான ஆராய்ச்சிகளை ஊக்குவிப்பதும் நிறுவன ரீதியான நடவடிக்கைகளை திட்டமிடுவதும் இந்த மாநாட்டின் பிரதான இலக்குகளாகும்.*

*தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் (NCPA) தரவுகளுக்கு அமைவாக 2024 ஆம் ஆண்டு 10,000 க்கும் மேற்பட்ட சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் அதனுடன் தொடர்புடைய முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன், அவற்றுள் 8% ஆனவை ஏதோவொரு வகை பாலியல் துஷ்பிரயோகத்துடன் சம்பந்தப்பட்டுள்ளன. எனவே, சான்றுகளின் அடிப்படையிலான தீர்வுகளை நோக்கி நகர வேண்டிய அவசரத் தேவையை உணர்ந்து சிறுவர்களுக்கெதிரான வன்முறைக்கு தீர்வுகாண்பதற்கு இலங்கை முன்னெடுத்துள்ள புதிய அர்ப்பணிப்புகளை பலப்படுத்துவதற்காக கொள்கை வகுப்பாளர்கள், கல்வியியலாளர்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகளை ஒரு மேடையில் சர்வதேச சிறுவர் பாதுகாப்பு மாநாடு ஒன்று சேர்க்கின்றது. அத்துடன், இந்த மாநாடு*

*சிறுவர் பாதுகாப்பு தொடர்பான தேசிய கொள்கையுடன் ஒத்துப்போவதுடன், சிறுவர்களுக்கெதிரான வன்முறையை ஒழிப்பதற்கான 2024 உலக அமைச்சர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட சர்வதேச உறுதிமொழிகளை செயற்படுத்தும் ஒரு மைல்கல்லாக இருக்கும்.*

*இது தொடர்பாக தொடக்கவிழாவில் கருத்து தெரிவித்த இலங்கை பாராளுமன்ற சபாநாயகர் வைத்தியர். ஜகத் விக்ரமரத்ன அவர்கள், "இது வெறுமனே ஒரு மாநாடல்ல, மாறாக, எமது சிறுவர்களை பாதுகாப்பதற்கான வழிமுறைகள் குறித்த தேசிய உரையாடலுக்கான பங்களிப்பாகும். இது வெறுமனே ஒரு பிரதிபலிப்பு மட்டுமல்ல. மாறாக செயற்படுவதற்கான ஒரு தளம்" என இதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.*

*அத்துடன், இந்நிகழ்வின் பிரதம அதிதியான நீதி அமைச்சர் கௌரவ ஹர்சன நானாயக்கார அவர்கள், "சிறுவர் பாதுகாப்பு என்பது நீதித்துறையுடன் சம்பந்தப்படும் ஒரு விடயமாகும். சிறுவர்களின் நலன்களில் கவனம் செலுத்தும் விதத்திலும் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு சிறுவர் நேய நீதியை உறுதிப்படுத்தும் விதத்திலும் முறைமைகளை மறுசீரமைப்பது எமது கடமையாகும்".*

*இந்த அர்ப்பணிப்புக்களுக்கு வலுசேர்க்கும் விதத்தில் இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதர் கார்மென் மொரெனோ அவர்கள், சட்டவாக்கக் கட்டமைப்புக்களை பலப்படுத்தி சிறுவர்களுடன் கடமையாற்றும் நிறுவனங்கள் மற்றும் தொழில்வல்லுநர்களின் ஆற்றலை மேம்படுத்தி சிறுவர் நேய நீதித்துறை மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு தமது ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். அத்துடன், சிறுவர்களுக்கான நீதியில் நேர்மையும் சமத்துவமும் பிரதிபலிக்க வேண்டும் என்றும், அவர்களின் வயது மற்றும் பால்நிலைத் தேவைகளை கருத்திற்கொண்டு அவர்களைப் பராமரிப்பதோடு, அவர்களின் கண்ணியமும் எதிர்கால வளர்ச்சியும் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அவர் மேலும் வலியுறுத்தினார்.*

*மேலும், ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் இலங்கைக்கான பதில் பிரதிநிதி பெகோனா அரல்லானோ அவர்கள் கருத்து தெரிவிக்கும் போது 'பலமான சான்றுகள், வினைத்திறன்மிக்க தலைமைத்துவம், ஒருங்கிணைப்பு மற்றும் முதலீட்டுடன் இலங்கைக்கு அனைத்து சிறுவர்களும் பயன்பெறும் ஒரு பாதுகாப்பு முறைமையை கட்டியெழுப்ப முடியும். எனவே, சிறுவர்களுக்கெதிரான வன்முறைகளுக்கு தீர்வுகாண்பதில் கல்வித் துறையின் வகிபாகம் இன்றியமையாதது" என்று வலியுறுத்தினார்.*

*தரவுகளை நடைமுறைக்கு கொண்டுவருவதில் கல்வித்துறையின் முக்கிய வகிபாகத்தை கோடிட்டுக்காட்டிய களனிய பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் சிரேஷ்டபோராசிரியர் நிலந்தி டீ சில்வா அவர்கள், "பல்கலைக்கழகங்கள் சிறுவர் பாதுகாப்பை வெறுமனே கற்பக்கும் ஒரு நிலையமாக மட்டுமன்றி, அவை அதனை உரிய பாதையில் முன்னெடுக்க வேண்டும். எனவே, சிறுவர் பாதுகாப்பு தொடர்பான சர்வதேச மாநாடு (ICCP'25) அத்தகைய மாற்றத்தின் துவக்கமாக இருக்கும்" என்று தெரிவித்தார்.*

*ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் விஷேட பிரிநிதி கலாநிதி. நஜாத் மாலா மாஜித் அவர்கள், சிறுவர்களுக்கெதிரான வன்முறை தொடர்பான காணொளிச் செய்தியில் வன்முறைகளினால் பாதிக்கப்பட்டவர்களை மையப்படுத்திய சேவைகளை தொடர்ச்சியாக ஒருவர்யும் தவறவிடாமல் வழங்க வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி என கூறியுள்ளார்.*

*தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர், முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி அம்மணி. பிரீதி இனோகா அமரசிங்ஹ அவர்கள், ஏற்கனவே பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு நீதி வழங்குவது எந்தளவு முக்கியமோ, சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகாது அவர்களை பாதுகாப்பதும்*

*அந்தளவு முக்கியத்துவம் வாய்ந்தது என கோடிட்டுக்காட்டினார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், சிறுவர்களைப் பாதுகாக்கும் முயற்சிகளை பலப்படுத்துவதற்கு சமூக வலையமைப்பும் சமூக அங்கத்தவர்களின் ஈடுபாடும் இன்றியமையாதது என்றும், அனைவரும் ஒன்றிணைந்து போதிய விழிப்புணர்வுடன் செயற்பட்டால் மாத்திரமே சிறுவர்களுக்கு பாதுகாப்பான எதிர்காலத்தை ஏற்படுத்திக்கொடுக்க முடியுமென வலியுறுத்தினார்.*

*சிறுவர் பாதுகாப்பு தொடர்பான சர்வதேச மாநாடு : இந்த மாநாடு களனிய பல்கலைக்கழகத்தின் பால்நிலைக் கற்கைகள் மத்திய நிலையத்தினால் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் கூட்டொத்துழைப்புடன் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் இலங்கை நிறுவனத்தினூடாக ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியுடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது சிறுவர்களுக்கெதிரான வன்முறைகளை முடிவிற்குக் கொண்டுவருவதற்காக சான்று மைய தீர்வுகளை நோக்கி வழிப்படுத்துவதற்காக தேசிய தலைமைத்துவம், கல்வியியலாளர்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்புத் துறையில் முனைப்புடன் செயற்பாடும் செயற்பாட்டாளர்களை ஒரு இடத்தில் திரட்டுகின்றது.*

*இந்த மாநாட்டிற்கு நீதித்துறைக்கான அனுசரணைத் திட்டத்திற்கான (JURE) ஐரோப்பிய ஒன்றியத்தினூடாக நிதியுதவி வழங்கப்படுவதுடன் நீதி அமைச்சுடன் இணைந்து ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (UNICEF) மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயற்றிட்டத்தினால் (UNDP) நடைமுறைப்படுத்தப்படுகின்றது.*

*###*

**மேலதிக தகவல்களுக்கு தயவுசெய்து தொடர்புகொள்ளவும் :**

*பிஸ்மார்க் ஸ்வான்கின், இலங்கை ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் +94 777236548, bswangin@unicef.org*

*லக்னா பரானமான்ன, இலங்கை ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம், UNICEF Sri Lanka, +94776783352, lparanamanna@unicef.org*

*சானிகா மலல்கொட, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை , +94 717151506, shanika.ncpa@gmail.com*

*சமன் ராசபக்ச, களனிய பல்கலைக்கழகம், +94 71 441 2117, saman.rajapaksha@kln.ac.lk*

*லி ஆன் பெர்னாண்டோ, இலங்கை மற்றும் மலைத்தேவுகளுக்கான ஐரோப்பிய ஒன்றியக் குழு, +94 77 455 2399, Le-Anne.FERNANDO@eeas.europa.eu*